# இனங்காணல், பயிற்சித் திட்டம் மற்றும் மறுஆய்வுக் குழு (IPRC) செயல்முறைக்கான பெற்றோர்/பாதுகாவலரின் வழிகாட்டி

மாணவர்கள் வெவ்வேறு வழிகளில் வளர்ச்சியடைந்து கற்கிறார்கள் என்பதை உணர்ந்து, மேலதிக ஆதரவு மற்றும் சேவைகள் தேவைப்படும் அனைத்து மாணவர்களுக்கும் அவர்களின் முழுமையான திறனை அடைவதற்குரிய சிறப்புக் கல்வி வழங்கப்படுகின்றது.

யோர்க் பிராந்திய மாவட்டப் பாடசாலைச் சபை (YRDSB) எங்கள் மாணவர்களுக்கு என்ன வழங்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க குடும்பங்களுடன் இணைந்து செயல்படுகிறது, இதன் மூலம் அவர்கள் கற்றுக் கொள்ளவும் வளரவும் முடியும்.

இந்த வழிகாட்டி பின்வருவனவற்றைக் கோடிட்டுக் காட்டுகின்றது:

- இனங்காணல், பயிற்சித் திட்டம் மற்றும் மறுஆய்வுக் குழுச் சந்திப்புக்கு முன்னர், அதன்போது மற்றும் பின்னர் என்ன நடைபெறுகிறது
- பெற்றோர்/பாதுகாவலர் உரிமைகள்
- சரியான ஆதரவை வழங்குவதற்காக குடும்பங்களுடன் இணைந்து நாங்கள் பணியாற்றுவது எப்படி
- ஒரு மாணவர் அடையாளம் காணப்பட்டால் என்ன நடக்கும்
- சிறப்புக் கல்வி ஆதரவு தேவைப்படும் மாணவர்களை நாங்கள் எப்படி அடையாளம் காண்கிறோம்

## பரிந்துரைக்கான செயல்முறை

இனங்காணல், பயிற்சித் திட்டம் மற்றும் மறுஆய்வுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள அழைப்பைப் பெற்றுள்ள பெற்றோர்/பாதுகாவலர்களுக்கு உதவுவதற்காக இந்த வழிகாட்டி வடிவமைக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட திட்டங்கள் தேவைப்படும் மாணவர்களை எப்படி ஆதரிப்பது மற்றும் இந்த அழைப்பிற்கு வழிவகுக்கும் படிமுறைகள் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு, உங்கள் பிள்ளையின் ஆசிரியர் அல்லது அதிபரிடம் பேசவும்.

சபையின் இணையத்தளத்தில் உள்ள சிறப்புக் கல்விப் பக்கத்தையும்நீங்கள் பார்வையிடலாம்.

# இனங்காணல், பயிற்சித் திட்டம் மற்றும் மறுஆய்வுக் குழு (IPRC) என்றால் என்ன?

IPRC என்பது YRDSB ஊழியர்களின் குழுவாகும், இது:

- ஒரு மாணவர் "விதிவிலக்கானவர்" என்று அடையாளம் காணப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கிறது.
- மாணவரின் விதிவிலக்கான தன்மைகளை இனங்கண்டு கொள்கிறது.
- பொருத்தமான பயிற்சித் திட்டத்தைத் தீர்மானிக்கிறது
- ஒவ்வொரு கல்வியாண்டிலும் ஒருமுறையாவது மாணவரின் அடையாளம் மற்றும் பயிற்சித் திட்டத்தை மதிப்பாய்வு செய்கின்றது.

*ஒரு **விதிவிலக்கான மாணவர்** என்பவர், ஒரு குழுவால் சிறப்புக் கல்வித் திட்டத்தில் இடம் பெற வேண்டும் என்று கருதப்படும் மாணவர் ஆவார், அவரது நடத்தை, தொடர்பாடல், அறிவுசார், உடலியல் அல்லது பலவித விதிவிலக்குகள் கொண்ட ஒரு மாணவராவார். (Special Education in Ontario, p.A2)*

# IPRCக்கு முன்னர்

## IPRC ஐத் தொடங்குதல்

IPRC சந்திப்பு நடைபெறுவதற்கு இரண்டு வழிமுறைகள் உள்ளன:

### 1. பாடசாலைப் பரிந்துரை

உங்கள் பிள்ளை ஒரு சிறப்புக் கல்வித் திட்டத்தின் மூலம் பயனடையலாம் என்று உங்கள் பிள்ளையின் பாடசாலை அதிபர் அல்லது ஆசிரியர் நம்பினால், உங்கள் பிள்ளையை IPRCக்கு அனுப்பும்படி அந்த அதிபர் பரிந்துரை செய்யக்கூடும் நீங்கள் எழுத்துபூர்வ அறிவிப்பு ஒன்றைப் பெற்றுக்கொள்வீர்கள்.

### 2. பெற்றோர்/பாதுகாவலர் கோரிக்கை

உங்கள் பிள்ளையை IPRC க்குப் பரிந்துரைக்கும்படி நீங்களும் அதிபரிடம் கேட்கலாம். இந்தக் கோரிக்கை எழுத்துபூர்வமாக இருக்க வேண்டும். உங்கள் கோரிக்கையைப் பெற்ற 15 நாட்களுக்குள் அதிபர் எழுத்துபூர்வமாகப் பதிலளிப்பார். IPRC எப்போது சந்திக்கும் என்பதை அவர் உங்களுக்குச் சொல்வார்.

# தகவல் பகிர்வு

IPRC சந்திப்புக்கு முன்னர்:

- உங்கள் பிள்ளையின் பாடசாலையில் உள்ள சிறப்புக் கல்வி ஆதார ஆசிரியர் (SERT) உங்கள் பிள்ளைக்குப் பயனளிக்கும் பயிற்சித் திட்டத் தெரிவுகளைப் பற்றி உங்களுடன் கலந்துரையாடுவார். மதிப்பீட்டு முடிவுகள் போன்ற உங்கள் பிள்ளையைப் பற்றிய தகவல்களின் சுருக்கத்தைப் பாடசாலை பகிர்ந்து கொள்ளும்.
- நீங்கள் தேர்வுசெய்தால், IPRC மதிப்பாய்வு செய்து பரிசீலிக்க வேண்டும் என நீங்கள் விரும்பும் எந்த எழுத்துபூர்வமான தகவலையும் உங்கள் பாடசாலை அதிபரிடம் கொடுக்கலாம்

# அழைப்புக் கடிதம்

IPRC கூட்டத்திற்கு உங்களை அழைக்கும் கடிதத்தை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். உங்கள் பிள்ளையின் பயிற்சித் திட்டத்தைப் பரிசீலிப்பதில் பெற்றோர்/பாதுகாவலர்கள் முக்கியமான பங்காளிகள் ஆவார்கள். இந்தக் கடிதம் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- சந்திப்புக்கான திகதி, நேரம் மற்றும் இடம்
- நீங்கள் கலந்து கொள்வீர்களா என்று கேட்கும்.

IPRCக்குக் குறைந்தது 10 நாட்களுக்கு முன்னதாக இந்த அழைப்புக் கடிதத்தையும் இந்த வழிகாட்டியின் பிரதியையும் நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

உங்களால் கூட்டத்திற்குச் செல்ல முடியாவிட்டால்:

- வேறு திகதி அல்லது நேரத்தை ஏற்பாடு செய்வதற்கு பாடசாலை அதிபரைத் தொடர்புகொள்ளவும்
- நீங்கள் கலந்து கொள்ள முடியாது என்பதை அதிபருக்குத் தெரியப்படுத்தவும்.

உங்களால் சந்திப்புக்குச் செல்ல முடியாவிட்டால், நீங்கள் கலந்துகொள்ளாமல் அந்தச் சந்திப்பு நடைபெறுவதை ஆதரித்தால், அடையாளம் மற்றும் இடம் குறித்த IPRC இன் முடிவை அதிபர் உங்களுக்கு அனுப்புவார். உங்கள் பரிசீலனை மற்றும் கையொப்பத்திற்காக இந்தத் தகவலை நீங்கள் எழுத்துபூர்வமாகப் பெற்றுக்கொள்வீர்கள்.

# IPRC சந்திப்பின்போது

## IPRC சந்திப்பு ஒன்றில் யார் கலந்துகொள்ள முடியும்?

IPRC ஒன்றில் ஆகக் குறைந்தது மூன்று பேராவது இருக்க வேண்டும்,

- அவர்களில் ஒருவர் பாடசாலை அதிபர் அல்லது சபையின் மேற்பார்வை அதிகாரியாக இருக்க வேண்டும். அவர் IPRC இன் தலைவராக இருப்பார்.
- இந்தக் குழுவின் மற்ற இரண்டு உறுப்பினர்கள் சபையின் ஊழியர்கள் ஆவர்.
- பெற்றோர்கள்/பாதுகாவலர்கள் கலந்துகொள்ளும்படி எப்பொழுதும் அழைக்கப்படுகிறார்கள்.
- மற்றவர்களைக் கலந்துகொள்ளுமாறு நீங்கள் அல்லது பாடசாலை அதிபர் கேட்டுக்கொள்ளலாம்.

கலந்துகொள்ளக்கூடிய மேலதிக நபர்கள்:

- உங்கள் பிள்ளை (மாணவர்கள் பொருத்தமான முறையில் கலந்து கொள்ள வரவேற்கப்படுகிறார்கள்; 16 வயது அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொள்ளவும் கலந்துரையாடல்களில் பங்கேற்கவும் உரிமையுடையவர்கள்)
- உங்கள் பிள்ளையின் பாடசாலை அதிபர்
- உங்கள் பிள்ளையின் ஆசிரியர்
- சிறப்புக் கல்விப் பணியாளர்கள், சபை ஆதரவுப் பணியாளர்கள் அல்லது மேலதிகத் தகவல்கள் அல்லது விளக்கங்களை வழங்கும் ஒரு முகவர் பிரதிநிதி போன்ற பிற ஆதார பணியாளர்கள்
- உங்களுக்கு அல்லது உங்கள் பிள்ளைக்கு ஆதரவாக இருக்கக்கூடிய ஒரு பிரதிநிதி
- மொழிபெயர்ப்பாளர் ஒருவர், தேவைப்பட்டால் (உங்கள் பிள்ளையின் பாடசாலை அதிபர் மூலம் மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் சேவைகளை நீங்கள் கோரமுடியும்).

## IPRC சந்திப்பின் போது என்ன நடைபெறும்?

1. IPRC இன் தலைவர் அறிமுகப்படுத்தலுடன் சந்திப்பைத் தொடங்கி சந்திப்பின் நோக்கத்தைக் கோடிட்டுக் காட்டுவார். நீங்கள் கலந்துரையாடலில் பங்கேற்க ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.

2. இந்தக் குழு:
    - கல்வி, உடல்நலம் அல்லது உளவியல் மதிப்பீடுகள் உள்ளிட்ட மாணவர் பற்றித் தொடர்புடைய தகவல்கள் அனைத்தையும் மதிப்பாய்வு செய்யும்

    - இது பயனுள்ளதாக இருக்குமா என்று உங்கள் பிள்ளையுடன் கதைக்கவும்.  உங்கள் பிள்ளை 16 வயதுக்குக் கீழ்ப்பட்டவராக இருந்தால் உங்கள் ஒப்புதல் தேவைப்படும்
    - நீங்கள் அல்லது உங்கள் பிள்ளை (16 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருந்தால்) சமர்ப்பிக்கும் எந்தத் தகவலையும் பரிசீலிக்கும்.
    - உங்கள் பிள்ளையின் பலம் மற்றும் வளர்ச்சி தேவைப்படும் பகுதிகளைப் பற்றிக் கலந்துரையாடும்.

3. அனைத்துத் தகவல்களும் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டவுடன், IPRC பின்வரும் முடிவுகளை மேற்கொள்ளும்:

a) உங்கள் பிள்ளை விதிவிலக்கான தேவையுள்ள ஒருவராக அடையாளம் காணப்பட வேண்டுமா, அத்துடன்
b) உங்கள் பிள்ளை விதிவிலக்கான தேவையுள்ளவராக அடையாளம் காணப்பட்டால் அவருக்கு மிகவும் பொருத்தமான "பயிற்சித் திட்டம்"

4. தனது முடிவு குறித்த அறிக்கையை IPRC தயாரிக்கும்.

## இனங்காணல்

உங்கள் பிள்ளை விதிவிலக்கான தேவையுள்ளவராக அடையாளம் காணப்பட்டால், அதன் வகைகள் மற்றும் வரையறைகள்.

கல்வி அமைச்சு வகைகளையும் வரையறைகளையும் வழங்குகின்றது அந்த வகைகளாவன:

- **நடத்தை**
- **தொடர்பாடல்**
    - மதியிறுக்கம் (Autism)
    - செவிப்புலன் அற்றோர் மற்றும் செவிப்புலன் குறைவானவர்
    - மொழியறிவுக் குறைபாடு
    - பேச்சுக் குறைபாடு
    - கற்றல் குறைபாடு
- **அறிவுசார் குறைபாடு**
    - வளர்ச்சிக் குறைபாடு
    - விதிவிலக்கான திறமைகள், ஆற்றல்கள் உள்ளவர்கள் (Giftedness)
    - லேசான அறிவுசார் குறைபாடு
- **உடலியல் ரீதியான குறைபாடு**
    - பார்வைப்புலன் அற்றோர் மற்றும் பார்வைப்புலன் குறைவானவர்
    - உடல் ஊனம்
    -

- **பல்வேறு விதிவிலக்குகள்**

## பயிற்சித் திட்டம்

உங்கள் பிள்ளை விதிவிலக்கான தேவையுடையவராக அடையாளம் காணப்பட்டால், IPRC மிகவும் பொருத்தமான பயிற்சித் திட்டத்தைக் கண்டறியும்.

இதில் ஐந்து பயிற்சித் திட்டத் தெரிவுகள் உள்ளன:

- மறைமுக ஆதரவுடன் வழக்கமான வகுப்பறை
- வளங்களின் உதவியுடன் வழக்கமான வகுப்பறை
- உதவியைத் திரும்பப் பெறுதலுடன் கூடிய வழக்கமான வகுப்பறை
- பகுதியளவில் ஒருங்கிணைந்த வகுப்பு
- முழுமையான சுயமாகக் கையாளக்கூடிய சிறப்புக் கல்வி வகுப்பு

இந்தக் குழு முதலில் உங்கள் விருப்பங்களைப் பரிசீலிக்கும் மற்றும் சரியான ஆதரவுடன் வழக்கமான வகுப்பில் இடம்பெறும் பயிற்சித் திட்டம் உங்கள் பிள்ளையின் தேவைகளைச் சிறப்பாக பூர்த்தி செய்யுமானால், அதைக் கவனத்திலெடுக்கும். இந்தக் குழுவின் முடிவை ஏற்கவோ அல்லது

நிராகரிக்கவோ உங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

இயலுமானால், பொருத்தமான திட்டம் மற்றும் சேவை ஆதரவுடன் மாணவர்களை அவர்களது வீட்டுப் பாடசாலையில் நாம் வைத்திருக்கிறோம்.

சிறப்புக் கல்வி வகுப்பில் இடம்பெறும் பயிற்சித் திட்டம் தீர்மானிக்கப்பட்டால், IPRC அதற்குரிய காரணங்களைக் குறிப்பிட வேண்டும்.

## முடிவு குறித்த அறிக்கை

முடிவு குறித்த ஒரு அறிக்கையை IPRC உருவாக்குகிறது.  இந்தக் குழுவின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகளின் சுருக்கம் இதில் அடங்கும், பின்வருவன உட்பட:

- உங்கள் பிள்ளையின் பலம் மற்றும் வளர்ச்சி தேவைப்படும் பகுதிகள்
- உங்கள் பிள்ளை விதிவிலக்கானவராக அடையாளம் காணப்பட்டால்

- விதிவிலக்கான தன்மைகளின்/விதிவிலக்குகளின் வகை மற்றும் வரையறை (கல்வி அமைச்சகத்தின் படி)
- பயிற்சித் திட்டம் பற்றிய முடிவு, மற்றும் சிறப்புக் கல்வி வகுப்பில் பயிற்சித் திட்டம் வழங்குவது முடிவாக இருந்தால், அதற்கான காரணங்கள்
- சிறப்புக் கல்வித் திட்டம் மற்றும் சேவைகளுக்கான பரிந்துரைகள்

கேட்கப்படும் ஒவ்வொரு கேள்விக்கும் 'ஆம்' அல்லது 'இல்லை' என்பதற்கு அடுத்துள்ள பெட்டியில் 'குறியிடுவதன்' மூலம் உங்கள் பிள்ளையை அடையாளம் காணுதல் மற்றும் பயிற்சித் திட்டம் தொடர்பான IPRC முடிவுகளுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா என்று தெரிவிக்கவும். அதில் கையொப்பமிடுவது, "அடையாளம் காணுதல் மற்றும் பயிற்சித் திட்டம்" குறித்த முடிவுகளை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள் அல்லது உடன்படவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது. நீங்கள் வேண்டுமானால்:

- IPRC சந்திப்பில் முடிவு குறித்த அறிக்கையில் கையொப்பமிடலாம் அல்லது
- மேலதிகப் பரிசீலனைக்காக அறிக்கையை வீட்டிற்கு எடுத்துச் சென்று உங்கள் பிள்ளையின் அதிபரிடம் திருப்பி அனுப்பலாம்

# IPRC சந்திப்புக்குப் பின்னர்

## தனிநபர் கல்வித் திட்டம் (IEP)

IPRC இன் அடையாளம் காணுதல் மற்றும் பயிற்சித் திட்டம் குறித்த முடிவை நீங்கள் ஏற்றுக்கொண்டால், அடுத்த கட்டம் ஒரு தனிப்பட்ட கல்வித் திட்டமாகும். IEP இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள இலக்குகள் பற்றிய உள்ளீட்டை வழங்க நீங்கள் அழைக்கப்படுவீர்கள்.

**தனிநபர் கல்வித் திட்டம்** என்பது எழுதப்பட்ட ஒரு திட்டமாகும். இது பின்வருபவற்றை விவரிக்கிறது:

- மாணவரின் பலம் மற்றும் வளர்ச்சி தேவைப்படும் பகுதிகள்
- மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய சிறப்புக் கல்வித் திட்டம் மற்றும் சேவைகள்
- தேவைப்படும் ஏதாவது அனுசரணை வசதிகள் (விசேடகற்பித்தல் முறை மற்றும் மதிப்பீட்டு உத்திகள்)
- கற்றுக்கொள்வதற்கும் செயல்விளக்கம் செய்வதற்கும் மாணவர்களுக்குத் தேவையான உபகரணங்கள்
- தேவைப்படும் ஏதாவது பாடத்திட்ட மாற்றங்கள் (மாணவரின் கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு பாடம் அல்லது பாடத்திற்கான தரநிலை எதிர்பார்ப்புகளில் மாற்றங்கள்)

- இந்தத் திட்டம் மற்றும் சேவைகள் வழங்கப்படும் முறைமை
- மாணவரின் முன்னேற்றம் மற்றும் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்கான திட்டம்
- வெற்றிகரமான மாற்றங்களைச் செய்வதில் மாணவர்களை ஆதரிக்கும் திட்டம்

உங்கள் பிள்ளை சிறப்புக் கல்வித் திட்டத்தில் சேர்க்கப்பட்ட 30 பள்ளி நாட்களுக்குள் IEP முடிக்கப்பட வேண்டும். அதன் பிரதி ஒன்றை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

தனிப்பட்ட கல்வித் திட்டங்கள் (IEPs) பற்றிய மேலதிகத் தகவல்களுக்குத், தயவுசெய்து பார்வையிடவும் தனிப்பட்ட கல்வித் திட்டம்: பெற்றோருக்கான வழிகாட்டி இந்த வழிகாட்டிwww.yrdsb.ca அல்லது உங்கள் பாடசாலை அலுவலகம் மூலம் கிடைக்கும்.

## அடையாளம் காணுதல் மற்றும் பயிற்சித் திட்டங்கள் ஆகியன எவ்வாறு மதிப்பாய்வு செய்யப்படுகின்றன?

ஒவ்வொரு கல்வியாண்டிலும் ஒரு IPRC மீளாய்வுக் கூட்டம் நடத்தப்படும். உங்கள் பிள்ளை மூன்று மாதங்கள் சிறப்புக் கல்வித் திட்டத்தில் இருந்த பிறகு எந்த நேரத்திலும் நீங்கள் மீளாய்வுச் சந்திப்பைக் கோரலாம்

இந்த IPRC மீளாய்வு:

- அடையாளப்படுத்தல் மற்றும் பயிற்சித் திட்டம் பற்றிய மூலத்தீர்மானங்களை மீளாய்வு செய்கிறது
- கல்வி, உடல்நலம் அல்லது உளவியல் மதிப்பீடுகள் உள்ளிட்ட, உங்கள் பிள்ளையைப் பற்றிய அனைத்துத் தகவல்களையும் மதிப்பாய்வு செய்கிறது
- அவை தொடர வேண்டுமா அல்லது வேறு முடிவு தேவையா என்பதைத் தீர்மானிக்கிறது

**உங்கள் பிள்ளை ஒரு சமூக வகுப்பில் இருந்தால் அல்லது அடையாளப்படுத்தல் மற்றும் பயிற்சித் திட்டத்தில் மாற்றம் ஒன்று ஏற்பட்டால்**, முறைசார் IPRC சந்திப்பு ஒன்று ஆண்டுதோறும் நடத்தப்படும், மேலும் IPRC சந்திப்புக்கான அழைப்புக் கடிதம் ஒன்றை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

**உங்கள் பிள்ளை சமூக வகுப்பில் இல்லை என்றால், தற்போதைய அடையாளப்படுத்தல் மற்றும் பயிற்சித் திட்டத்துடன் தொடருமாறு பாடசாலை பரிந்துரைத்தால்**, தொடர்ச்சியான IPRC அடையாளப்படுத்தல் மற்றும் பயிற்சித் திட்டத்துக்கான உறுதிப்படுத்தல் கடிதம் ஒன்றை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். உங்களால் செய்யக்கூடியது:

- முறையான IPRC கூட்டத்தைக் கோருதல் அல்லது
- தற்போதைய அடையாளப்படுத்தல் மற்றும் பயிற்சித் திட்டம் மூலம் உங்கள் பிள்ளைக்குரிய சேவை சிறப்பாகச் செய்யப்படுவதாக நீங்கள் உணர்ந்தால் சந்திப்பதில்லை என்று முடிவு செய்யலாம்

# மேன்முறையீட்டுச் செயன்முறை

## IPRC இன் முடிவுகளுடன் நான் உடன்படவில்லை என்றால் என்ன செய்வது?

IPRC ஐ மீண்டும் சந்திப்பதற்கு நீங்கள் கேட்டுக் கொள்ளலாம். IPRC இன் மூலத்தீர்மானத்தைப் பெற்ற 15 நாட்களுக்குள் இதைச் செய்ய வேண்டும்.

கோரிக்கை பெறப்பட்டவுடன் கூடிய விரைவில் சந்திப்பு நடத்தப்படும். இந்தச் சந்திப்பில் நீங்கள் உங்கள் கரிசனைகளைக் குழுவிடம் விளக்கலாம். இந்தக் குழு உங்கள் கரிசனைகளைக் கவனமாகக் கேட்டு அவற்றைத் தீர்க்க முயற்சிக்கும். நீங்கள் IPRC உடன் இருக்கும் போது தனது முடிவை(வுகளை) மாற்றலாமா வேண்டாமா என்பதை அது முடிவு செய்யும். நீங்கள் பின்னரும் உடன்படவில்லை என்றால், IPRC இன் முடிவை(வுகளை) எதிர்த்து மேன்முறையீடு செய்யலாம்.

## IPRC முடிவை எதிர்த்து நான் எப்படி மேன்முறையீடு செய்வது?

நீங்கள் அல்லது உங்கள் பிள்ளை (16 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள்) IPRC முடிவுகளுடன் உடன்படவில்லை என்றால், நீங்கள் மேன்முறையீட்டுக்கான எழுத்துபூர்வ அறிவிப்பைத் தாக்கல் செய்யலாம்:

- IPRC இன் இரண்டாவது சந்திப்பு முடிவைப் பெற்ற 15 நாட்களுக்குள், அல்லது
- IPRC இன் மூலத்தீர்மானம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள்

உங்கள் மேன்முறையீட்டு அறிவிப்பில், பின்வருவனவற்றை நீங்கள் குறிப்பிட வேண்டும்:

- IPRC இன் எந்த முடிவுகளின் மீது நீங்கள் மேன்முறையீடு செய்கிறீர்கள் (அடையாளப்படுத்தல் மற்றும்/அல்லது பயிற்சித் திட்டம்)
- இந்தக் குழுவுடன் உடன்படாததற்கான உங்கள் காரணங்கள்

மேன்முறையீட்டுக்கான எழுத்துபூர்வ அறிவிப்பைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்:
*Director/Secretary of the York Region District School Board*
*60 Wellington St. W*
*Aurora, Onatio*
*L4G 3H2*

## மேன்முறையீட்டுச் சபையின் உறுப்பினர்கள் யார்?

உங்கள் மேன்முறையீட்டை விசாரிக்கச் சிறப்புக் கல்வி மேன்முறையீட்டுச் சபை ஒன்று அமைக்கப்படும். இதில் மூன்று உறுப்பினர்கள் இருப்பார்கள். அதன் உறுப்பினர்கள் எவருக்கும் மேன்முறையீட்டின் கீழ் உள்ள கரிசனைகள் குறித்து எந்த விபரமோ அல்லது சம்பந்தமோ இருக்காது. இந்தக் குழு பின்வருபவர்களை உள்ளடக்கியிருக்கும்:

- யோர்க் பிராந்திய மாவட்டப் பாடசாலைச் சபையால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு உறுப்பினர்
- உங்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு உறுப்பினர்
- மற்ற இரு உறுப்பினர்களால் கூட்டாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு தலைவர், அல்லது இரு உறுப்பினர்களும் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் உடன்பட முடியாவிட்டால் கல்வி அமைச்சின் பொருத்தமான மாவட்ட மேலாளர் ஒருவர்

## மேன்முறையீட்டு வாரியம் என்ன செய்கிறது?

தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டதும், அவர்கள் ஒரு கூட்டத்தை அமைப்பார்கள். தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட 30 நாட்களுக்குள் கூட்டம் நடைபெறும் (பெற்றோர் மற்றும் குழு எழுத்துபூர்வமாக ஒப்புதல் அளிக்காத வரை).

இந்தக் கூட்டத்தில்:

- மேன்முறையீட்டுச் சபை IPRC ஆல் மதிப்பாய்வு செய்யப்பட்ட உள்ளடக்கத்தைப் பெற்று மதிப்பாய்வு செய்யும். மேன்முறையீட்டின் கீழ் உள்ள விடயத்தைப் பற்றிய தகவல் தெரிந்த எவரையும் அவர்கள் நேர்காணல் செய்யலாம்.
- நீங்களும் உங்கள் பிள்ளையும் (16 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்) அனைத்து கலந்துரையாடல்களிலும் கலந்துகொள்ளவும் பங்கேற்கவும் அழைக்கப்படுவீர்கள்.

கூட்டம் முடிவடைந்த மூன்று நாட்களுக்குள், மேன்முறையீட்டுச் சபை அதன் பரிந்துரையை(களை) வழங்கும். அது பின்வருமாறு இருக்கலாம்:

- IPRC உடன் உடன்படுவதுடன், முடிவை நடைமுறைப்படுத்துமாறு பரிந்துரைக்கலாம், அல்லது

- IPRC உடன் உடன்படாமல் மற்றும் உங்கள் பிள்ளையின் அடையாளப்படுத்தல் மற்றும்/அல்லது பயிற்சித் திட்டம் குறித்துச் சபைக்கு வேறொரு பரிந்துரை செய்யலாம்.

மேன்முறையீட்டுச் சபை அதன் பரிந்துரைகள் மற்றும் காரணங்களை எழுத்துபூர்வமாக உங்களுக்கும் யோர்க் பிராந்திய மாவட்டப் பாடசாலை சபைக்கும் தெரிவிக்கும்.

## மேன்முறையீட்டுச் சபையின் பரிந்துரைகள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன?

- யோர்க் பிராந்திய மாவட்டப் பாடசாலை சபை பரிந்துரைகள் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை முடிவு செய்யும். மேன்முறையீட்டுச் சபையின் எழுத்துபூர்வ அறிக்கையைப் பெற்ற 30 நாட்களுக்குள் அவர்கள் அதனை முடிவு செய்வார்கள். (தயவு செய்து கவனிக்கவும்: மேன்முறையீட்டுச் சபையின் பரிந்துரையை பாடசாலைச் சபைகள் பின்பற்றத் வேண்டிய தேவையில்லை)
- நீங்கள் யோர்க் பிராந்திய மாவட்டப் பாடசாலைச் சபையின் முடிவை ஏற்கலாம். அல்லது, தீர்ப்பாயத்தின் செயலாளருக்கு எழுதுவதன் மூலம் சிறப்புக் கல்வித் தீர்ப்பாயத்தில் மேன்முறையீடு செய்யலாம். தீர்ப்பாயத்திற்கு விண்ணப்பிப்பது பற்றிய தகவல்கள் மேன்முறையீட்டுச் சபையின் முடிவோடு சேர்க்கப்படும்.

## சிறப்புக் கல்வி ஆலோசனைக் குழு

ஒன்ராறியோவின் கல்விச் சட்டத்தின் கீழ், சிறப்புக் கல்வித் தேவைகளைக் கொண்ட ஒவ்வொரு மாணவரும் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான சிறப்புக் கல்வித் திட்டங்கள் மற்றும் சேவைகளைப் பெற உரிமையுடையவர்கள். யோர்க் பிராந்தியத்தில், **சிறப்புக் கல்வி ஆலோசனைக் குழு** (SEAC) என்று அழைக்கப்படும் வாரியத்தின் ஒரு குழு உள்ளது. சிறப்புக் கல்வித் தேவையுடைய மாணவர்கள் தகுந்த கல்விச் சேவைகளைப் பெறுவதை உறுதிசெய்வதற்காக இந்தக் குழு செயல்படுகிறது. SEAC:

- சிறப்புக் கல்வித் திட்டங்கள் மற்றும் சேவைகளை நிறுவுதல் மற்றும் மேம்படுத்துதல் பற்றிச் சபைக்குப் பரிந்துரை செய்யலாம்.
- மேலதிக ஆதரவு தேவைப்படும் பிள்ளைகளின் பெற்றோர்/பாதுகாவலர்களுக்குத் தகவல்கள், ஆலோசனை மற்றும் உதவியை வழங்கும்.

**நீங்கள் அழைக்கப்பட்டுள்ளீர்கள்.** ஆர்வமுள்ள அனைத்து சமூகக் குடியிருப்பாளர்களும் எங்கள் சிறப்புக் கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டு அவதானிக்க வரவேற்கிறோம். இதற்கான சந்திப்பு அட்டவணையை சபை இணையத்தளமாகிய www.yrdsb.caஇல் நீங்கள் காணலாம்.

## குடும்பங்களுக்கு உதவக்கூடிய நிறுவனங்கள் எவை?

சிறப்புக் கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் குடும்பங்களுக்கான தகவல் மற்றும் ஆதரவைப் பல நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. உதாரணமாகப், பின்வரும் குழுக்கள் சிறப்புக் கல்வி ஆலோசனைக் குழுவின் பகுதிகளாகும்.

| | |
|---|---|
| **Association for Bright Children - York Region North**<br>(416) 925-6136<br>abcinfo@abcontario.ca<br>www.abcontario.ca | **Down Syndrome Society of Ontario**<br>(416) 410-3696, 1-800-649-3639<br>info@dsayr.ca<br>www.dsayr.ca |
| **Association for Bright Children - York Region South**<br>(416) 925-6136<br>abcinfo@abcontario.ca<br>www.abcontario.ca | **Early Intervention Services of York Region**<br>1-888-703-5437<br>www.york.ca/support/childrens-services/children-special-needs |
| **Autism Ontario Central East Region**<br>(416) 246-9592 extension 270,<br>york@autismontario.com<br>www.autismontario.com/region/central-east | **Easter Seals Ontario**<br>(416) 421-8377 or 1-800-668-6252<br>info@easterseals.org<br>www.easterseals.org |
| **Children's Treatment Network of Simcoe York (CTN)**<br>(905) 954-4011, 1-877-719-4795,<br>www.ctnsy.ca | **Learning Disabilities Association of York Region**<br>(905) 884-7933<br>info@ldayr.org<br>https://ldayr.org/ |
| **Community Living Central York**<br>(905) 898-3000<br>clnad@clnad.com<br>https://clcy.ca | **Ontario Parents of Visually Impaired Children (OPVIC)**<br>(519) -616-4397<br>tmmorra@rogers.com<br>https://opvic.ca |
| **Community Living Georgina**<br>(905) 722-8947<br>admin@communitylivinggeorgina.com<br>www.communitylivinggeorgina.com | **VOICE for Deaf and Hard of Hearing Children**<br>(416) 487-7719<br>admin@voicefordeafkids.com<br>www.voicefordeafkids.com |

| **Community Living York South**<br>(905) 884-9110<br>info@communitylivingyorksouth.ca<br>www.communitylivingyorksouth.ca | **York Support Services Network (யோர்க் ஆதரவுச் சேவைகள் வலையமைப்பு)**<br>1-866-275-9776, (905) 898-6455<br>contact@yssn.ca<br>www.yssn.ca |
|---|---|

## மாகாணப் பள்ளிகள் மற்றும் விளக்கப் பள்ளிகள் அமைச்சு

செவிப்புலனற்றோர் அல்லது செவிப்புலன் குறைந்தோர், பார்வைப்புலனற்றோர் அல்லது பார்வைப்புலன் குறைந்தோர், செவிப்புலனும் பார்வைப்புலனும் அற்றோர் மற்றும்/அல்லது கடுமையான கற்றல்-குறைபாடுள்ள மாணவர்களுக்காக ஒன்ராறியோ முழுவதும் மாகாணப் பாடசாலைகள் மற்றும் செயல்விளக்கப் பாடசாலைகளைக் கல்வி அமைச்சு இயக்கி வருகின்றது. பாடசாலையிலிருந்து வெகு தொலைவில் வசிக்கும் தினசரி பயணம் செய்யும் மாணவர்களுக்கு திங்கள் முதல் வெள்ளி வரைக்கும் குடியிருப்புப் பாடசாலைகளில் திட்டங்கள் வழங்கப்படுகின்றன. மேலதிகத் தகவல்களுக்கு தயவுசெய்து கல்வி அமைச்சின் இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

## கடுமையான கற்றல் குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கான ஆங்கில மொழி விளக்கப் பாடசாலைகள்

Amethyst School
1515 Cheapside Street
London, ON N5V 3N9
தொலைபேசி: 519-453-4408

Sagonaska School
350 Dundas Street West
Belleville, ON K8P 1B2
தொலைபேசி: 613-967-2830

Trillium School
347 Ontario Street South
Milton, ON L9T 3X9
தொலைபேசி: 905-878-8428

## மாகாணப் பாடசாலைகள் அமைச்சு

Ernest C. Drury School
255 Ontario Street South
Milton, ON L9T 2M5
தொலைபேசி: 905-878-2851
TTY: 905-878-7195

Robarts School
1515 Cheapside Street
London, ON N5V 3N9
தொலைபேசி: 519-453-4400
TTY: 519-453-4400

Sir James Whitney School
350 Dundas Street West
Belleville, ON K8P 1B2
தொலைபேசி: 613-967-2823 அல்லது 1-800-501-6240
TTY: 613-967-2823

## பார்வைப்புலனற்றோர் மற்றும் செவிப்புலனும் பார்வைப்புலனும் அற்றோருக்குரிய மாகாணப் பாடசாலை

W. Ross Macdonald School
350 Brant Avenue
Brantford, ON N3T 3J9
தொலைபேசி: 519-759-0730 அல்லது 1-866-618-9092

## செவிப்புலனற்றோருக்கான பிரெஞ்சு மொழி மாகாணப் பாடசாலை மற்றும் கடுமையான கற்றல் குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கான செயல் விளக்கப் பாடசாலை

Centre Jules-Léger
281 Lanark Avenue
Ottawa, ON K1Z 6R8
தொலைபேசி: 613-761-9300 TTY: 613-761-9302

# சிறப்புக் கல்வித் திட்டம் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு

சிறப்புக் கல்விச் சேவைகள் மற்றும் திட்டங்கள் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு, சபையின் சிறப்புக் கல்வித் திட்டம்பற்றிப் பார்வையிடவும், சபையின் ஆன்லைன் இணையதளத்தில் கிடைக்கும் www.yrdsb.ca, உங்கள் உள்ளூர் பாடசாலையில் அல்லது பின்வருபவரைத் தொடர்புகொள்வதன் மூலம்:

- உங்கள் பிள்ளையின் பாடசாலை அதிபர்
- உங்கள் பாடசாலைகளின் கண்காணிப்பாளர்

- மாணவர் சேவைகள் பிரிவு 905-727-0022 இணைப்பு 3235 அல்லது Special.Ed@yrdsb.ca